**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.S.T.C.No. 57/2025**

**Deposition of Witness for Complainant PW1 (LW1)**

| | | |
|---|---|---|
| **Name** | : | **துரைராஜ்** |
| **Father's Name** | : | **ஆறுமுகம்** |
| **Village** | : | **பேரிகை** |
| **Taluk** | : | **கிருஷ்ணகிரி** |
| **Calling** | : | **ஆய்வாளர்** |
| **Age** | : | **52** |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**25.11.2025** **Witness Signature :**

**புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**(இந்த சாட்சி விசாரணை காணொளி மூலம் பதிவு செய்யப்படுகிறது. காணொளியின் ஒரு முனையில் நீதிபதியும் மற்றும் போலீசார் மற்றம் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரும் நீதிமன்ற ஊழியர்களும் இருக்கிறார்கள். காணொளியின் மற்றொரு முனையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ள சாட்சியான ஆய்வாளர் திரு. துரைராஜ் அவர்களும் தயாராக உள்ளார்கள். இரு தரப்பினரின் சம்மதத்தின் பேரில் இச்சாட்சி விசாரணை காணொளி மூலம் பதிவு செய்யப்படுகிறது.)**

1. நான் தற்போது ஆய்வாளராக பணியிலிருந்து வருகிறேன். கடந்த 24.012.2024 ம் தேதி, நடுவட்ட காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது, அன்றைய காலை 06.30 மணி முதல் உயரதிகாரிகள்

உத்தரவு படி நானும், என்னுடன் தேவாலா காவல் உதவி ஆய்வாளர் சந்திர மூர்த்தி, காவலர் பிரவீன் அன்சீப் மற்றும் நிலக்கோட்டை காவல் நிலைய முத்துக்குமார் , எருமாடு காவல் நிலைய காவலர் சசிக்குமார் ஆகியோருடன் கோத்தகிரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் லாட்டரி விற்பனையை தடுக்க ரோந்து அலுவலுக்கு சென்றோம்.

2. கோத்தகிரி அரசு மருத்துவமனை அருகில், போர் ஹவுஸ் பகுதியில் வரும்போது, க.எண். 32/17B சச்சானா ரெசிடன்சி என்ற வீட்டின் முன்பாக, சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த, TN 43 H 5344 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு நிற ேஹாண்டா ஆக்டிவா என்ற இருசக்கர வாகனத்தில், கருப்பு நிற பேக்குடன் நின்றுகொண்டிருந்த, சுமார் 45 மதிக்கத்தக்க நபரை பிடித்து விசாரிக்க அவர் தனது பெயரை, ஜோஸ் குமார், த.பெ. அம்ரூஸ் கோத்தகிரியை சேர்ந்தவர் என்றும், அவரைப் பிடித்து விசாரிக்க மேற்படி அவருக்கு சொந்தமான மேற்கண்ட வாகனத்தில், கோத்தகிரி சுற்றுப்புற பகுதியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரியை செல்போன் மூலம் விற்பனை செய்வதாக, ஒத்துக் கொண்டார். மேற்படி அவர் பயன்படுத்திய TN 43 H 5344 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு நிற ேஹாண்டா ஆக்டிவா என்ற இருசக்கர வாகனம் மற்றும் கருப்பு நிற ரியல்மி செல்போன் ஒன்று. எதிரியின் மகளின் செல்போன் ரியல்மி ஒன்று. இரண்டு சிம்முடன் கூடியது. லாட்டரியின் விற்பனைக்கு பயன்படுத்தப்பட்ட வரவு செலவு பணம் ரூ. 1,46,435 மற்றும் கருப்பு நிற பேக் ஆகியவற்றை ஒரு கைப்பற்றுதல் மகஜர் மூலம் உடனிருந்த சாட்சிகள், உதவி ஆய்வாளர் சந்திர மூர்த்தி காவலர் பிரவீன் அன்சிப் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர் மூலம்தான் கைப்பற்றினேன்.(அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (TN 43 H 5344 என்ற பதிவெண் கொண்ட சிவப்பு நிற ஹோண்டா ஆக்டிவா என்ற இருசக்கர வாகனம் அ.சா.பொ.1 ஆகவும் மற்றும் கருப்பு நிற ரியல்மி செல்போன் ஒன்று அ.சா.பொ.2 ஆகவும் எதிரியின் மகளின் செல்போன் ரியல்மி ஒன்று, இரண்டு சிம்முடன் கூடியது அ.சா.பொ.3 ஆகவும் லாட்டரியின் விற்பனைக்கு பயன்படுத்தப்பட்ட வரவு செலவு பணம் ரூ. 1,46,435 அ.சா.பொ.4 ஆகவும் கருப்பு நிற பேக் **அ.சா.பொ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). அதன் பிறகு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் கோத்தகிரி காவல் நிலையம் வந்து, தனியறிக்கை சமர்ப்பித்தேன். அந்த தனி அறிக்கை **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. தனியறிக்கையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம், தேதி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சச்சனா ரெசிடன்ஸி என்பது குடியிருப்பு பகுதி என்றால் சரிதான். அந்த வீட்டில் தான் எதிரி குடியிருந்து வந்தார் என்று சொன்னால் சரிதான். சம்பவத்தின்போது கோத்தகிரி எனக்கு புதிது என்றாலும், இங்குள்ள இடங்களைப் பற்றி நன்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். எதிரியிடம் விசாரித்தபோது குற்றத்தை ஒப்புக்கொண்டதாக கூறியுள்ள நிலையில் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் பேக், கருப்பு நிற பேக்கா அல்லது துணி பேக்கா அல்லது

பிளாஸ்டிக் பேக்கா அல்லது தோல் பேக்கா என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த பேக்கை எதிரியிடமிருந்து எந்த இடத்தில் வைத்து கைப்பற்றினோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ரியல்மி செல்போன் என்ன மாடல் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எந்தவிதமான லாட்டரி டிக்கெட்டுகளையும் நான் எதிரியிடமிருந்து கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எதிரியின் பணத்தை எந்த இடத்திலிருந்து ஆஜர் செய்தார் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். மேல் அதிகாரியில் உத்தரவின் பேரில் விசாரணை செய்ததாக கூறியுள்ள போதிலும் அந்த உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் வாய்மொழி உத்தவின் பேரில் சென்றோம். வாய்மொழி உத்தரவு என்பதை தனியறிக்கையில் நான் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை.

2. நான் எந்த வாகனத்தில் ஆய்வுக்கு சென்றேன் என்றால் தற்போது எனக்கு நியாபகம் இல்லை. அது அரசின் வாகனம் ஆகும் . எத்தனை வருடம் நான் நடுவட்டம் பகுதியில் பணியாற்றினேன் என்றால், ஒரு வருடம் ஆகும். எல்லா காவலர்களும் கோத்தகிரி காவல் நிலையத்திற்கு 06.00 மணிக்கு வந்துவிட்டோம். அங்கிருந்து நடந்து சென்று விசாரணைக்கு சென்றேம். சம்பவ இடம் கோத்தகிரி காவல் நிலையத்திலிருந்து சுமார் 500 மீட்டர் துாரத்தில் உள்ளது. அங்கிருந்த பொதுமக்கள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் தனியறிக்கையை எங்கு வைத்து தயார் செய்தேன் என்றால் வண்டியில் லேப்டாப் வைத்து தட்டச்சு செய்தேன். அதற்கான பிரிண்ட்டை பேருந்து நிலையம் அருகில் வைத்து கம்யூட்டர் சென்ட்ரில் எடுத்தேன். எந்த

கம்யூட்டர் சென்டரில் வைத்து எடுத்தேன் என்று தற்போது எனக்கு நியாபகம் இல்லை. சட்டத்திற்கு விரோதமாக, அனுமதியில்லாமல், எதிரியின் வீட்னுள் நுழைந்து அவரது வீட்டின் சமையல் அறையிலுள்ள பானையில் சேமித்து வைத்திருந்த பணத்தை எடுத்து வந்து ஒரு பொய்யான தனியறிக்கை தயார் செய்து தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜர் பிரிண்ட் எங்கு எடுக்கப்பட்டது என்று சொன்னால் தற்போது எனக்கு நியாபகம் இல்லை.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 25.11.2025
Judicial Magistrate,
Kotagiri